**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 148** **நாள்: 19.09.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையின் சார்பாக பள்ளி மாணவ, மாணவியர்களின் தூய்மைக்கான சேவை மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு மனிதச் சங்கிலி விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையின் சார்பாக தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு மற்றும் பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்குகள் குறித்தும் பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் சிறப்பு நிகழ்வாக, இன்று (19.09.2018) அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட வில்லிவாக்கம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தூய்மைக்கான சேவை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் இணைந்து நடத்தியது.

இந்நிகழ்ச்சியில் சுமார் 850 மாணவியர்கள் கலந்து கொண்டு ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிக்க மாட்டோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பின்னர், மாணவியர்கள் அனைவரும் தூய்மை இந்தியா திட்டம் குறித்தும், பிளாஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்குகள் குறித்தும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் சிட்கோ நகர் 1வது பிரதான சாலை, 4வது பிரதான சாலை மற்றும் சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலையின் ஒருபுறத்தில் நின்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் ஆ. பரந்தாமன், சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி. சீனிவாசன், IOCL நிறுவனத்தின் CSR துணை பொது மேலாளர் P. ராமகிஷோர், பசுமைப்படை ஜி. தங்கராஜ், கல்வி அலுவலர் ஏ. கோபால கிருஷ்ணன், தலைமையாசிரியை மற்றும் ஆசிரிய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**